Annual Subscription – Rs.130/-
ஆண்டு சந்தா – ரூ.130/-

*Price – Rs.10/-*
தனி பிரதி – ரூ.10/-

# பொறியாளர்
## PORIYAALAR

கட்டடம் - 15
Volume – 15

அடுக்கு - 01
Issue - 01

அக்டோபர் 2023
October 2023

## அண்ணலை போற்றுவோம்...




பொறியாளர் சங்கம் மற்றும் உதவிப் பொறியாளர் சங்கம்
தமிழ்நாடு பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005
தொலைபேசி: 044-2851 5445 / 044-2951 0445
பொறியாளர் இராமலிங்கம் இல்லம் : 044 - 2854 4043
website : www. aoeaeatnpwd.org / e-mail : aoe_aea@yahoo.com, gsaoe.pwd@gmail.com

**12.10.2023 அன்று தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறை பொறியாளர் சங்கம் & உதவி பொறியாளர் சங்கம், தருமபுரி கிளையின் பொறியாளர்கள் கலந்தாய்வு கூட்டம் தருமபுரி தும்பலஅள்ளி ஆய்வு மாளிகையில் மாலை 5.30 மணியளவில் நடைபெற்றது.**





12.10.2023

பொதுச் செயலாளர் மடல்

**பெருமதிப்பிற்குரியீர், பேரன்பிற்கினியீர், வணக்கம்.**

✍ நமது இரு துறைகளிலும் கண்காணிப்பு பொறியாளர், செயற்பொறியாளர், உதவிச்செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியல் தயாரிப்பதற்கு சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் உள்ள தடையாணைகளை விலக்கி பதவி உயர்வு பெறுவதற்கு உரிய தொடர் நடவடிக்கைகள் எடுக்க இரு துறைகளின் முதன்மை தலைமை பொறியாளர்களையும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். விரைவில் தீர்வு கிடைக்கும் என நம்புகிறோம்.

✍ நீர்வளத்துறை மற்றும் பொதுப்பணித்துறையில் புதிய உதவி பொறியாளர்கள் நியமனம் தொடர்பான வழக்கு முடிவடைந்த நிலையில் விரைவில் தீர்ப்பு வெளியிடப்படும் என் நம்புகிறோம். தேர்வு செய்யப்பட்ட உதவிப்பொறியாளர்கள் பணியில் சேருவதற்கு தேவையற்ற காலதாமதம் ஏற்படுகின்றது என உரியவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம்.

✍ கடந்த 28.09.2023 அன்று நடைபெற்ற மையச்சங்க செயற்குழு கூட்டத்தில் சங்கத் தேர்தல் நடத்தும் அலுவலர்களின் பதவி விலகல் விவாதிக்கப்பட்டு, ஏற்கப்பட்டது. தலைமைச் சங்க பொறுப்பாளர் பதவிகளில் பொ.ப.து. பொறியாளர் உறுப்பினர்களுக்கு உரிய பிரநிதித்துவம் வழங்கிட ஏதுவாக சங்க விதிகளில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ள ஒரு உபகுழு நியமிக்க தீர்மானிக்கப்பட்டது. (பக்கம் 6-ல் காண்க)

✍ மேற்குறிப்பிட்ட உபகுழுவின் பரிந்துரைகள் பெறப்பட்டவுடன் தலைமைச் சங்க செயற்குழுவில் ஒப்புதலளிக்கப்பட்டு, அனைத்து கிளை

சங்கங்களுக்கும் சுற்றுக்கு அனுப்பப்படும். பின்னர் பொதுக்குழுவில் ஒப்புதலளிக்கப்பட்டு மையச் சங்க தேர்தல் அறிவிக்கப்படும் என தெரிவித்துக்கொள்கிறோம்.

✍ மேற்குறிப்பிட்ட நிகழ்வினால் நமது தலைமைச் சங்க தேர்தல் குறைந்தது 3 மாதம் தள்ளிப்போவது தவிர்க்க இயலாததாகும். கிளைச் சங்கங்கள் தற்போதுள்ள விதிகளின்படி பொறுப்பாளர்களை உடன் தேர்வு செய்து தலைமைச் சங்கத்திற்கு தெரிவித்திட வேண்டுகிறோம். கிளைச் சங்கப் பொறுப்பாளர்கள் பட்டியல் கிடைக்கப்பெற்றவுடன் 2024-ம் ஆண்டிற்கான நாட்காட்டி மற்றும் நாட்குறிப்பு தற்போதைய பொறுப்பாளர்களால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படும் எனவும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மிக்க அன்புடன்,

**பொறிஞர்.மு.மதன்,**
பொதுச் செயலாளர், உதவிப் பொறியாளர் சங்கம்

**பொறிஞர்.மு.தனசேகரன்,**
பொதுச் செயலாளர்,பொறியாளர் சங்கம்

## WRD - RETIREMENT ON 30.09.2023

| | | |
|---|---|---|
| 1 | **பொறி.K.பிரபாகர்** | சிறப்புத் தலைமைப் பொறியாளர் |

அரசாணை (வாலாயம்) எண்.414, நீர்வளத்(டி2)துறை, நாள்: 30.09.2023

**We wish them a happy, peaceful & active retired life - Editor**

## SPECIAL CONTRIBUTIONS

| Sl.No | Name | Amount | Remarks |
|---|---|---|---|
| 1 | **Er.K.Prabakar**<br>Former Special Chief Engineer, WRD, TNIAMP Cell O/o Engineer-in-Chief & Chief Engineer (General), WRD, Chepauk, Chennai-600005 | **15,111** | Contribution on the eve of his retirement from ENGIBEF retirement benefit |

**We thank Er.K.Prabakar, Former Spl. CE for his contribution…**

## தருமபுரி கிளை

### தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறை பொறியாளர் சங்கம் & உதவி பொறியாளர் சங்கம் – தருமபுரி கிளை

12.10.2023 அன்று தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறை பொறியாளர் சங்கம் & உதவி பொறியாளர் சங்கம், தருமபுரி கிளையின் பொறியாளர்கள் கலந்தாய்வு கூட்டம் தருமபுரி தும்பலஅள்ளி ஆய்வு மாளிகையில் மாலை 5.30 மணியளவில் நடைபெற்றது. உதவி பொறியாளர் சங்க தலைவர் **பொறிஞர்.S.பார்த்தீபன், உதவிபொறியாளர், நீர்வளத்துறை** கூட்டத்தில் கலந்து கொள்ள வந்த கிளைச் சங்க பொறியாளர்களை வரவேற்று கூட்டத்தின் நோக்கம் மற்றும் கலந்தாலோசிக்க வேண்டிய பொருள் குறித்து எடுத்துரைத்தார்.

பொறியாளர் சங்க தலைவர் **பொறிஞர்.S.குமார், செயற்பொறியாளர், நீர்வளத்துறை, தருமபுரி** தலைமையேற்று தருமபுரி கிளையில் பொறியாளர் இல்லம் கட்ட கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட முயற்சிகள் குறித்தும், பொறியாளர் இல்லம் கட்ட வேண்டிய தேவை குறித்தும் எடுத்துரைத்தார்.

பொறியாளர் சங்க துணைத் தலைவர் **பொறிஞர்.A.சிவகுமார், செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, தருமபுரி** முன்னிலை வகித்து தருமபுரி கிளையில் பொறியாளர் இல்லம் கட்ட இடம் தேர்வு, திட்ட வரைப்படம் மற்றும் செயல்முறை குறித்து எடுத்துரைத்து விரைவாக கட்டிடம் கட்டும் பணிகள் துவக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து எடுத்துரைத்தார்.

பொறியாளர் சங்கம் & உதவி பொறியாளர் சங்கம், தருமபுரி கிளை சங்க பொருளாளர் **பொறிஞர்.V.வெங்கடேஷ், உதவிபொறியாளர், நீர்வளத்துறை** அவர்கள் பொறியாளர் இல்லம் கட்ட நிதி நிர்வாகம், நிதி திரட்டுதல் செயல்முறைகள் குறித்து எடுத்துரைத்தார்.

கட்டிட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பிரிவு **உதவிபொறியாளர் பொறிஞர்.S.கார்த்திகேயன், பொதுப்பணித்துறை, தருமபுரி** அவர்கள் பொறியாளர் இல்லம் கட்ட தோராய திட்ட வரைப்படம், அளவுகள் மற்றும் அறைகள் குறித்து விவரித்தார்.

உதவி பொறியாளர் சங்க செயலாளர் **பொறிஞர்.V.சாம்ராஜ், உதவிபொறியாளர், நீர்வளத்துறை** அவர்கள் தருமபுரி கிளை பொறியாளர்களுடன் விரிவான கலந்தாலோசனைக்கு பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்களை எடுத்துரைத்தார்.

 

1. தருமபுரியில் தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறை பொறியாளர் சங்கம் & உதவி பொறியாளர் சங்கம் சார்பில் பொறியாளர் இல்லம் கட்ட தீர்மானிக்கப்பட்டது.
2. பொறியாளர் இல்லம் கட்ட இடம் ஒதுக்கீடு செய்ய வேண்டி உரிய செயற்பொறியாளரை அணுக தீர்மானிக்கப்பட்டது.
3. தருமபுரியில் பொறியாளர் இல்லம் கட்டுவதற்கான செயல்பாடுகள், திட்டங்கள், நிதி திரட்டுதல், பணிகள் கண்காணிப்பு, தொடர் நடவடிக்கை மற்றும் மேம்பாடுகளுக்காக கீழ்க்கண்ட பொறியாளர்களை குழுவாக நியமிக்க தீர்மானிக்கப்பட்டது.
    1. பொறிஞர்.S.குமார், செயற்பொறியாளர், நீர்வளத்துறை
    2. பொறிஞர்.A.சிவகுமார், செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை
    3. பொறிஞர்.S.சாமிநாதன், செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை
    4. பொறிஞர்.V.உதயகுமார், உதவிசெயற்பொறியாளர், நீர்வளத்துறை
    5. பொறிஞர்.M.மோகனப்பிரியா, உதவிபொறியாளர், நீர்வளத்துறை
    6. பொறிஞர்.S.கார்த்திகேயன், உதவிபொறியாளர், பொதுப்பணித்துறை
    7. பொறிஞர்.T.கார்த்திகேயன் உதவிபொறியாளர், நீர்வளத்துறை
    8. பொறிஞர்.V.காளிபிரியன், உதவிபொறியாளர், நீர்வளத்துறை
    9. பொறிஞர்.M.ஞானவேல், உதவிபொறியாளர், பொதுப்பணித்துறை
    10. பொறிஞர்.P.ஜெயகுமார், உதவிபொறியாளர், நீர்வளத்துறை
    11. பொறிஞர்.M.பொன்னிவளவன், உதவிபொறியாளர், நீர்வளத்துறை
    12. பொறிஞர்.S.சக்தி, உதவிபொறியாளர், பொதுப்பணித்துறை

மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின், உதவி பொறியாளர் சங்க துணை தலைவர் **பொறிஞர்.M.மோகனப்பிரியா, உதவிபொறியாளர், நீர்வளத்துறை** அவர்கள் பொறியாளர் இல்லம் கட்ட எடுக்கப்பட்ட முன்னெடுப்புகளுக்கும், ஈடுபாட்டுடன் கலந்து கொண்ட பொறியாளர்களுக்கும் நன்றி தெரிவித்து கூட்டம் நிறைவு பெற்றது.

**பொறிஞர்.V.சாம்ராஜ்**
செயலாளர், உதவி பொறியாளர் சங்கம், தருமபுரி

**பொறிஞர்.V.உதயகுமார்**
செயலாளர், பொறியாளர் சங்கம், தருமபுரி

## MINUTES OF THE 10TH PEC MEETING HELD ON 28.09.2023

The 10th combined PEC meeting of AOE and AEA, was held on 28.09.2023 at the Association Office, Chepauk, Chennai-5 by about 11.00 AM.

The meeting was presided by Er.K.Prabakar, President, AOE. He requested the General Secretary, AOE to discuss the following subject agenda.

> **"The resignation of election committee and further process to conduct the election for Association of Engineers and Assistant Engineer's Association."**

**Er.M.Dhanasekaran,** General Secretary, AOE informed the PEC that the Election Committee formed to conduct the Election for our Association to select the Office Bearers for the tenure of 2023-25 has given resignation at the moment of declaring the Valid Nominations. The reason cited for their resignation is that "there is no rule provision in Bye-Law to postpone the Election to give consideration for the requisition raised by few member of PWD towards their representation in the posts of Office Bearers of our Associations and settle it before this election.

After detailed discussion, the following resolutions were passed unanimously:

1. The resignation of Conveners for AOE & AEA (2023-25) was accepted in view of the reasons explained in their resignation letters.
2. It was decided to constitute a Sub-Committee as per Bye-Law to suggest amendments to Bye-Law to consider the request of PWD members and to conduct the Election in a smooth manner.

The PEC after detailed discussions it was unanimously decided to nominate the following Office bearers as Sub-Committee members.

| Sl.No. | PWD | WRD |
|---|---|---|
| 1. | Er.E.Emmanuel Jaiker, EE, PWD, SP Division, Chepauk, Chennai-5 & Vice President, AOE | Er.R.Manivannan, DCE, WRD, PF, Chepauk, Chennai-5 & EC Member, AOE |
| 2. | Er.D.Rajeshwar Babu, AEE, PWD, P&D Circle, Chepauk, Chennai-5 & EC Member, AOE | Er.B.Arun, AEE, WRD, Environmental Cell Sub Division, Tharamani, Chennai-113 & Joint Secretary, Publication, AOE |
| 3. | Er.K.Periyakaruppan, AE, PWD, Maintenance Section, Ministers Bungalow, Adyar & EC Member, AEA | Er.S.Srinivasan, AE, WRD, O/o CE, IWS, Tharamani, Chennai-113 & Secretary, Public Relations, AEA |

The General Secretary, AOE will be the Convener of the Sub-Committee.

3. The Committee is requested to examine and recommend the Number and Name of posts in the existing list of posts of AOE & AEA in accordance with the strength of members from each Department as on 01.10.2023, so as to have adequate representation for PWD & WRD in the Parent Body Office Bearers posts.

a) The Sub-Committee shall submit their report to the General Secretary, AOE on or before 15.11.2023.

b) The first meeting of the Sub-Committee will be conducted on 05.10.2023 at 6 PM in the Association Office premises, Chepauk.

c) The PEC shall be convened to discuss the report of Sub-Committee on 22.11.2023 tentatively.

d) The final changes and for its approval, the General Body may be conducted on 06.01.2024 tentatively. The existing Office Bearers and EC members of AOE & AEA shall continue to carry out the regular activities of AOE & AEA till the election process is completed.

The meeting came to an end by about at 12.30 AM with vote of thanks by Er.A.Abdul Khudus, President, AEA.

**Er.M.Mathan,**
General Secretary, AEA

**Er.M.Dhanasekaran,**
General Secretary, AOE

To,

All the Office Bearers & EC Members of AOE & AEA
All Branches of AOE & AEA, Copy to the President, AOE, Chennai

**Letter No.023/GS-AOE/2023** **Dated: 21.09.2023**

To

The Secretary to Government (FAC),
Human Resources Management Department,
Secretariat, Chennai-600009

Sir,

Sub: TNES – Water Resources Department & Public Works Department – Promotion of Assistant Engineer to Assistant Executive Engineer – Reg.

Ref: Arised

The promotion of Assistant Engineers in both WRD & PWD to the post of Assistant Executive Engineer is due for long time because of pending in sanction on estimate of vacancy. It is came to know that the sanction on estimate of vacancy, depends on the cases filed in Supreme Court related with fixation of seniority.

In this regard it is brought to your knowledge that the seniority of Assistant Engineers who selected and appointed on 2007, is not challenged before Apex Court. Their seniority had been already revised as per the order of Division Bench of Madras High Court in WP No.6649/2017 and the Apex Court Order in C.A.No.4954/2016 and published vide Proceedings No.S2(2)73076/2006, dated 13.10.2021 by Engineer-in-Chief and Chief Engineer (General), WRD, Chepauk, Chennai-5.

Invoking the provision 47(1) of TN Govt. Servants (Conditions of Service) Act 2016 has not been stayed by Supreme Court.

So, approving the estimate of vacancy to fill up the Assistant Executive Engineer posts in both the WRD & PWD using the provision 47(1) of TN Govt. Servants (Conditions of Service) Act 2016 doesn't have any hindrance.

Further it is informed that the promotion for the another posts like Assistant Executive Engineer to Executive Engineer, Executive Engineer to Superintending Engineer, Superintending Engineer to Chief Engineer where given in both WRD & PWD.

Hence considering the above facts we request your consideration in sanction of estimate of vacancy for the post of Assistant Executive Engineer in both the WRD & PWD.

Further it is informed that the post of Assistant Executive Engineer is essential to ensure the quality and progress of work at site. The increase in vacancy may increase the delay in executions of projects, and also makes more fatigue to the individuals due to holding more additional charges. Hence it is informed that our Engineers can't held responsible for anything happens in the quality and progress of work in both the WRD & PWD.

With kind regards,

**Er.M.Mathan,**
General Secretary,
Assistant Engineers' Association

**Er.M.Dhanasekaran,**
General Secretary,
Association of Engineers

**கடித எண்.025/ பொ.ச.பொ.ச./2023** **நாள் : 04.10.2023**

பெறுநர்,

**மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள்,**
தமிழ்நாடு அரசு, தலைமைச் செயலகம்,
சென்னை - 600009

பெருமதிப்பிற்குரிய அய்யா,

**பொருள்:** பொதுப்பணித்துறை பொறியாளர் சங்கம் மற்றும் உதவிப் பொறியாளர் சங்கத்தின் சார்பாக வேண்டுகோள் - சமர்ப்பித்தல்.

மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்களுக்கு எங்கள் பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஒன்றிணைந்த பொதுப்பணித்துறையில் 1989-ஆம் அண்டு ஊதியக்குழுவில் உதவிப் பொறியாளர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை தாங்கள் சிரமேற்கொண்டு நிதித்துறையினரிடம் எங்களுக்காக வாதாடி உரிய ஊதிய விகிதத்தை பெற்றுத்தந்ததை என்றென்றும் நன்றியுடன் நினைவு கூறுகிறோம்.

மேலும் கடந்த 2010-ல் மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்ட ஊதியவிகிதமானது வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளதை மீண்டும் தங்கள் கவனத்திற்கு சமர்பிக்கின்றோம்.

| வ.எண். | பதவி | 2010ல் ஒரு நபர் குழுவில் பரிந்துரைத்த முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் வழங்கிய ஊதிய விகிதம் | அரசாணை எண்.242ற்குப்பின் குறைத்து நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1 | உதவிப் பொறியாளர் | ரூ.15600 - 39100 + 5400 (GP) | ரூ.9300 - 34800 + GP5100 |
| 2 | உதவிச் செயற்பொறியாளர் | ரூ.15600 - 39100 + 6600 (GP) | ரூ.15600 - 39100 + GP5400 |
| 3 | செயற்பொறியாளர் | ரூ.15600 - 39100 + 7600 (GP) | ரூ.15600 - 39100 + GP6600 |

இதனால் உதவிப் பொறியாளர்களுக்கு மாத ஊதியத்தில் சுமார் ரூ.12000 முதல் ரூ.18000 வரை இழப்பு ஏற்படுகின்றது எனவும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேற்கண்ட ஊதியக் குறைப்பிற்கு எதிராக எங்கள் சங்கங்களின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. உச்சநீதிமன்ற உத்தரவுப்படி ஓய்வுபெற்ற நீதியரசர் திரு.D.முருகேசன் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையில் எங்கள் கோரிக்கையினை முழுமையாக புறந்தள்ளி, முந்தைய ஊதிய குழுக்களில் பொறியாளர்களை விட குறைந்த ஊதியம் பெற்று வந்த கால்நடை மருத்துவர் போன்ற ஒருசில பிரிவினர்களுக்கு மட்டும், ஊதிய விகிதத்தினை உயர்த்தி எங்களை வஞ்சித்துள்ளனர் என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

வேறுவழியின்றி மேற்கண்ட சம்பள குறை தீர்க்கும் குழுவின் பரிந்துரையின் பேரில் வெளியிடப்பட்ட சம்பளக் குறைப்பு அரசாணைக்கும் தடையாணை பெற்று நமது பொறியாளர்கள் (உதவிப் பொறியாளர், உதவிச் செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர்) இன்றுவரை 6வது ஊதியக்குழு ஊதிய விகிதமே பெற்று வரும் அவல நிலை தொடர்கிறது என்பதை தங்களின் கனிவான கவனத்திற்கு சமர்ப்பிக்கின்றோம்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கள் கோரிக்கையின் நியாயத்தினை நன்கு உணர்ந்தவர் என்ற முறையில் மாண்புமிகு முதல்வர் அவர்களிடமும், மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் அவர்களிடமும் எங்கள் கோரிக்கையினை எடுத்துரைத்து எங்கள் சங்கங்களை நேரிடையாக அழைத்துப்பேசி நீண்டகாலமாக தொடர்கின்ற ஊதிய முரண்பாட்டிற்கு ஒரு நிரந்தர தீர்வுகான வழிவகை செய்யுமாறு மிகப் பணிவுடன் வேண்டுகிறோம்.

மிக்க அன்புடன்,

தங்கள் உண்மையுள்ள,
**பொறி.மு.தனசேகரன்,**
பொதுச் செயலாளர், பொறியாளர் சங்கம்.

**திருச்சி பொறியாளர் நாச்சிமுத்து இல்ல புனரமைப்பு மற்றும் பொறியாளர் வீரப்பன் இல்லத்தின் முதல் தளம் எழுப்பும் பணிகளுக்காக சிறப்பு நிதியினை வழங்கியோர்கள்**

| வ.எண். | பெயர் | ரூபாய் |
|---|---|---|
| 1 | **பொறி.V.வேல்முருகன்,** செயற்பொறியளார் மருதையாறு வடிநில கோட்டம், அரியலூர் மற்றும் இணைச் செயலாளர், பொறியாளர் சங்கம், திருச்சி கிளை | ரூ.6,000/- |
| 2 | **பொறி.C.செந்தில்குமார்,** உதவிச்செயற்பொறியாளர், மருதையாறு வடிநில கோட்டம், அரியலூர் | ரூ.5,000/- |
| 2 | **பொறி.V.சாந்தி,** உதவிச்செயற்பொறியாளர், மருதையாறு வடிநில உபகோட்டம், அரியலூர் | ரூ.5,000/- |
| 3 | **பொறி.G.சரவணன்,** உதவிச்செயற்பொறியாளர், மருதையாறு வடிநில உபகோட்டம், பெரம்பலூர் | ரூ.5,000/- |
| 4 | **பொறி.T.மருதமுத்து,** உதவிப்பொறியாளர், மருதையாறு வடிநில உபகோட்டம், பெரம்பலூர் | ரூ.2,000/- |
| | **பொறி.T.தினகரன்,** உதவிப்பொறியாளர், மருதையாறு வடிநில உபகோட்டம், பெரம்பலூர் | ரூ.2,000/- |

# TAMILNADU ENGINEERS' FEDERATION

(A Common Forum of Graduate Engineers of all the Government Departments, Boards and Corporation)

"Poriyaalar Ramalingam Home", PWD, PWD Campus, Chepauk, Chennai-600005

044-22300190 / 28515445 e-mail : tnef.tamilnadu@gmail.com

President
Er.K.Prabakar,
8056291841

Vice-President
Er.B.Dhanaseelan
7338931241

General Secretary
Er.T.Jayanthi
9710622185

Secretary (Admin)
Er.C.Hemachandran
9551160260

Secretary (Co-ordination)
Er.R.Dhanasekar
9444150966

Secretary (Publicity)
Er.P.T.V.Suresh Kumar
9962511899

Secretary (Action Programme)
Er.S.Prakash
9488666555

Treasurer
Er.R.Deepak
9444525770

Internal Auditor
Er.M.Arunkumar
99629284414


**தேதி: 28.09.2023**

பெறுநர்,

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்,**
தலைமைச் செயலகம், சென்னை-600009

பெருமதிப்பிற்குரிய அய்யா,

**பொருள்:** தமிழ்நாடு அரசு பொறியியல் துறைகள் மற்றும் நிறுவனங்களில் ஓய்வுபெற்ற பொறியாளர்களை ஆலோசகர்களாக நியமித்தல் - மறுபரிசீலனை செய்ய வேண்டுதல்.

தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பானது தமிழ்நாடு அரசு பொறியியல் துறைகள் மற்றும் நிறுவனங்களாகிய நீர்வளத்துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, ஊரகவளர்ச்சித்துறை, வேளாண் பொறியியல் துறை மற்றும் பொறியியல் நிறுவனங்களாகிய மெட்ரோ வாட்டர், வீட்டுவசதி வாரியம், மின்வாரியம், நகர்ப்புற மேம்பாட்டு வாரியம், போக்குவத்து கழகம், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் சுமார் 10,000-க்கும் மேற்பட்ட பட்டதாரி பொறியாளர்களின் பணிநலன்களை பாதுகாக்க ஏற்படுத்தப்பட்ட அமைப்பு என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழ்நாட்டை 1 டிரில்லியன் டாலர் மதிப்பிலான வளர்ந்த மாநிலமாக (நாட்டிலேயே முதலாவதாக) தாங்கள் மேற்கொண்டு வரும் கடின உழைப்பிற்கும், முயற்சிக்கும் எங்கள் நன்றியினையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

கொரோனாவில் வீழ்ச்சியுற்ற பொருளாதாரத்தினை மேம்படுத்தி மக்கள் பயன்பெறும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள், நலத்திட்டங்களையும் தொய்வின்றி செயல்படுத்தி வரும் தங்களுக்கு மீண்டும் எங்கள் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழ்நாட்டில் தங்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டங்களில் அரசுத் துறைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் பொறியாளர்களின் பங்கு இன்றியமையாதது என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் மேற்கொண்ட வளர்ச்சித் திட்டங்களின் மாநில அரசின் நிதி உதவியுடனும் மற்றும் உலக வங்கி, AIIB, JICA போன்ற வெளிநாட்டு நிறுவனங்களின் கடன் உதவி மூலமாகவும் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. மேற்கண்ட திட்டங்களில் நிறைவேற்றுவதற்கு அரசு துறைகள் மற்றும் நிறுவனங்களின் பணிபுரியும் பொறியாளர்கள் (உதவிப் பொறியாளர்கள் முதல் தலைமைப் பொறியாளர்கள் வரை) அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றனர்.

மேற்கண்ட வளர்ச்சி திட்டங்களை நிறைவேற்றுவதற்கு தற்போது அரசு துறைகள் மற்றும் நிறுவனங்களில் ஆலோசகர்கள் என்ற போர்வையில் ஓய்வு பெற்ற பொறியாளர்களை அமர்த்தி வேலைகளை முன்னெடுப்பதை தங்களின் கனிவான கவனத்திற்கு சமர்ப்பிக்கின்றோம்.

ஓய்வு பெற்ற பொறியாளர்கள் பணியாற்றும் துறைகள் / நிறுவனங்கள் விபரம் பின்வருமாறு:

1. இந்து சமய அறநிலையத்துறை
2. நெடுஞ்சாலைத் துறை
3. பொதுப்பணித்துறை
4. நீர்வளத்துறை
5. ஊரக வளர்ச்சித்துறை
6. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (Corporation & Municipalities)
7. தமிழ்நாடு நீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் (TWAD)
8. நகர்ப்புற மேம்பாட்டு வாரியம்
9. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் (TNHB)
10. தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT)
11. தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் (SIPCOT)
12. சிறு தொழில்கள் வளர்ச்சி கழகம் (SIDCO)

இவ்வாறு ஓய்வு பெற்ற பொறியாளர்களை ஆலோசகர்களாக நியமிப்பதால் அரசுக்கு ஏற்படும் கீழ்கண்ட பாதகமான விளைவுகளை தங்களுக்கு சமர்ப்பிக்கின்றோம்.

1. மேற்கண்ட திட்டங்களில் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்ட ஓய்வு பெற்ற பொறியாளர்கள் எவரும் தங்கள் பணிக்காலத்தில் அதிமுக்கியத்துவம் வாய்ந்த எந்த திட்டத்தினையும் நிறைவேற்றியதில்லை.
2. அவர்கள் ஓரளவு பணி அனுபவம் பெற்றவர்களேயன்றி அவர்களுடைய பொறியியல் அறிவு இக்காலத்திற்கு ஒவ்வாததாகும் (Obsolete)
3. அவர்கள் பெரும்பாலோனோர் தங்கள் பணிக்காலத்திலேயே அரசுக்கு தவறான மதிப்பீடுகளை கொடுத்து அரசுத் திட்டங்களை கூடுதல் மதிப்பீட்டில் செலவு செய்திட காரணமாக இருந்துள்ளனர்.
4. மேலும், தற்போது ஓய்வு பெற்றுவிட்டதால் இவர்கள் தயாரிக்கும் / செயல்படுத்தும் திட்டங்களுக்கு எந்தவித பொறுப்பும் ஏற்படுத்த இயலாது எனவும் தெரிவிக்கின்றோம்.
5. இவர்களில் பெரும்பாலோர் கடந்த அரசில் பணிபுரிந்து தவறான திட்டங்களை செயல்படுத்தியுள்ளதால் அரசின் கடன் சுமை அதிகமானதுடன், ஏராளமான பயனற்ற திட்டங்களையும் செயல்படுத்தியுள்ளனர்.
6. இவர்கள் ஆலோசகர் என்று பணிபுரிந்து வருவதால் தற்போது அரசு துறைகள் மற்றும் நிறுவனங்களின் பணிபுரியும் பொறியாளர்களின் அன்றாட பணிகளில் தலையிடுகின்றனர். இதனால் பணியில் உள்ள பொறியாளர்கள் தங்கள் திறமைகளை வெளிக்காட்ட முடியாததுடன் ஒரு அவநம்பிக்கை மற்றும் அச்சத்துடன் பணியாற்றும் சூழ்நிலை உள்ளது எனவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.
7. இவர்களுக்கு அரசு வழங்கும் ஓய்வூதியம் போக மாத ஊதியம், சீருந்து, பிற வசதிகள் என அரசு செலவில் தர வேண்டியிருப்பதால் அரசுக்கு தேவையற்ற கூடுதல் செலவீனம் ஏற்படுகிறது எனவும் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

எனவே, அரசுத்துறைகள் மற்றும் நிறுவனங்களில் ஆலோசகர்கள் என்ற போர்வையில் ஓய்வு பெற்ற பொறியாளர்களை நியமிப்பதை மறுபரிசீலனை செய்து அவர்களை உடனடியாக பணியிலிருந்து விடுவிக்குமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை மிக்க பணிவுடன் கோருகிறோம்.

தற்போது அரசுத் துறைகள், நிறுவனங்களில் பணியாற்றும் பொறியாளர்களாகிய நாங்கள் அவர்களைவிட சிறந்த உழைப்பை / ஆலோசனைகளை அரசுக்கு வழங்குவோம் என உறுதிபட தெரிவிக்கின்றோம்.

மிக்க அன்புடன்,

தங்கள் உண்மையுள்ள,

**பொறி.K.பிரபாகர்,**

தலைவர், தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு

# மதுரையை தலைமையிடமாக கொண்டு
# புதிய கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம்

**சுருக்கம்**

பொதுப்பணித் துறை – மதுரையை தலைமையிடமாகக் கொண்டு ஒரு கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்ட அலுவலகம், சென்னையை தலைமையிடமாகக் கொண்டு கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்ட அலுவலகம் – திருவண்ணாமலையை தலைமையிடமாகக் கொண்டு கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்ட அலுவலகம், திருநெல்வேலியை தலைமையிடமாகக் கொண்டு கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்ட அலுவலகம், புதிதாக தோற்றுவித்தல் மற்றும் அவற்றிற்கான மொத்தம் 42 பணியிடங்கள் பணிப்பெயர்ச்சி அடிப்படையிலும் மற்றும் 1 செயற்பொறியாளர் பணியிடம் புதிதாக தோற்றுவித்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**பொதுப்பணி(ஜி1)த் துறை**

**அரசாணை (நிலை) எண்.52**

**நாள்: 21.09.2023**
**சோபகிருது, புரட்டாசி–4**
**திருவள்ளுவர் ஆண்டு 2054**

**படிக்கப்பட்டது:**

1) அரசாணை(நிலை)எண்.216, பொதுப்பணி (எப்1)த் துறை, நாள் 02.06.2017.
2) அரசாணை (நிலை) எண் 158, பொதுப்பணி (டி2)த் துறை, நாள் 01.11.2021.
3) முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித் துறை, சென்னை கடிதம் எண்.உ.செ.பொ/டி10/ 18569/2022, நாள் 13.02.2023,
4) முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித் துறை, சென்னை கடிதம் எண். உ.செ.பொ /டி10/ 18569/2022, நாள் 4.8.2023

******

**ஆணை:**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் நீர்வளத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் சென்னையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கிவந்த சிறப்பு திட்டக் கோட்டம்–1 அலுவலகம் மற்றும் அதனை சார்ந்த சென்னையில் உள்ள நான்கு சிறப்பு திட்டக் கோட்ட உபகோட்ட அலுவலகங்களை பணிப் பெயர்ச்சியின் அடிப்படையில், பொதுப்பணித் துறையைச் சார்ந்த கண்காணிப்புப் பொறியாளர், பொபது, திட்டங்கள் மற்றும் வடிவமைப்பு வட்டம், சென்னை அவர்களின் கீழ் சென்னையை தலைமை இடமாகக் கொண்டு இயங்குவதற்கு ஒரு கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்ட அலுவலகமும் மற்றும் சென்னை, திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தலைமையிடமாகக் கொண்டு இயங்குவதற்கு நான்கு கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்ட அலுவலகங்களும் உருவாக்கப்பட்டன மற்றும் ஒரு கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம் மற்றும் அதனை சார்ந்த நான்கு உபகோட்ட அலுவலகங்களுக்கு கீழ்க்குறிப்பிட்ட தற்காலிகப் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டன:–

(த.பி.பா)

| வ. எண் | பதவியின் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | செயற் பொறியாளர் | 1 |
| 2 | உதவி செயற் பொறியாளர் | 4 |
| 3 | உதவிப் பொறியாளர் / இளநிலை பொறியாளர் | 14 |
| 4 | முதுநிலை வரைதொழில் அலுவலர் | 1 |
| 5 | வரைதொழில் அலுவலர் | 1 |
| 6 | இளநிலை வரைதொழில் அலுவலர் | 6 |
| 7 | உதவி வரைவாளர் | 2 |
| 8 | கோட்டக் கணக்கர் | 1 |
| 9 | கண்காணிப்பாளர் | 1 |
| 10 | உதவியாளர் | 7 |
| 11 | காசாளர் | 1 |
| 12 | இளநிலை உதவியாளர் | 9 |
| 13 | தட்டச்சர் | 3 |
| 14 | பதிவுறு எழுத்தர் | 1 |
| 15 | அலுவலக உதவியாளர் | 12 |
| 16 | காவலர் | 4 |
| 17 | இலகுரக ஓட்டுநர் | 3 |
| 18 | தொழில்நுட்ப உதவியாளர் | 1 |
| | மொத்தம் | 72 |

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் துறையை, பொதுப்பணித் துறை மற்றும் நீர்வளத் துறை என இரண்டாக பிரித்தல் தொடர்பான வழிமுறைகள் வெளியிடப்பட்டன.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித் துறை, சென்னை அவர்கள் தமிழகத்தில் கூடுதலாக புதிய மாவட்டங்கள் தோற்றுவிக்கப்பட்ட நிலையில் அனைத்து மாவட்டங்களிலுள்ள பாரம்பரிய மிக்க கட்டடங்களை தொல்லியல் துறையின் ஆலோசனையின் அடிப்படையில் புனரமைப்பதற்கு தற்போது சென்னையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கிவரும் ஒரு கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம் மற்றும் அதனைச் சார்ந்த சென்னை, திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் இயங்கிவரும் நான்கு கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்டங்கள் மட்டுமே உள்ளன எனவும், மேற்கூறிய நான்கு உபகோட்டங்களுக்கு கீழ்க்காணும் மாவட்டங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது என்றும், அம்மாவட்டங்களில் நடைபெறும் புனரமைப்புப் பணிகளை அந்தந்த உபகோட்டங்கள் வாயிலாக அனைத்து பாரம்பரிய கட்டடங்களின் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் தெரிவித்துள்ளார் :-

| | | |
|---|---|---|
| 1 | கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்டம், சென்னை<br>தலைமையிடம்–சென்னை | சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், இராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய 10 மாவட்டங்கள் |
| 2 | கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்டம், திருச்சி<br>தலைமையிடம் – திருச்சி | திருச்சி, பெரம்பலூர், அரியலூர், கடலூர், மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை, ஆகிய 9 மாவட்டங்கள் |
| 3 | கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்டம், கோயம்புத்தூர்<br>தலைமையிடம் – கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், திருப்பூர், திண்டுக்கல், கரூர், நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் உதகமண்டலம் ஆகிய 10 மாவட்டங்கள். |
| 4 | கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்டம், மதுரை<br>தலைமையிடம் – மதுரை | மதுரை, தேனி, சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், தென்காசி, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 9 மாவட்டங்கள். |

(i) தற்போது, பாரம்பரிய மிக்க கட்டடங்களின் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளும் ஒரு உதவி செயற்பொறியாளர் அவர்கள் குறைந்தது 8 முதல் 11 மாவட்டங்கள் வரை பயணம் செய்து அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டிய சூழலில் உள்ளார் என்றும் பாரம்பரிய மிக்க கட்டடங்களின் புனரமைப்பு மேற்கொள்ளும் பணிகளை மேற்பார்வையிட மற்றும் மேற்கொள்ளும் செயற் பொறியாளர் அவர்கள் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் பயணம் செய்து கண்காணிக்கும் சூழலில் உள்ளார்.

(ii) மேலும், தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையில், 2022–2023–ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில், பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கை எண்–39 தொடர்பாக மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் பாரம்பரிய கட்டடங்கள் ரூ.100 கோடி மதிப்பீட்டில் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைத்து புனரமைக்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

(iii) மேலும், தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையில், 2022–2023–ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில், பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கை எண்–43 சம்மந்தமாக அறிவிப்புகள் வெளியிடப்பட்டதில், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ரூ.25 கோடி மதிப்பீட்டில் பாரம்பரிய பள்ளிக் கட்டடங்கள் புதுப்பிக்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

(த.பி.பா)

(iv) பல்வேறு அரசாணைகளில், 5 இடங்களில் அமைந்துள்ள பாரம்பரியக் கட்டடங்களை புனரமைப்பு செய்வதற்காகவும், ரூ.81.32 கோடி மற்றும் 29 இடங்களில் அமைந்துள்ள பாரம்பரிய கட்டடங்களை புனரமைப்பு செய்வதற்காக ரூ.80.36 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிட்டதன்படி, அனைத்துப் பணிகளும் தொடங்கப்பட்டு, செவ்வனே நடைபெற்றுக் கொண்டு வருகிறது என்று தெரிவித்துள்ளார்.

4. 01.04.2023 அன்று சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

"மதுரையில் ஒரு புதிய பாரம்பரிய 'கட்டட மையம் மற்றும் பாதுகாப்புக் கோட்டம்' மற்றும் சென்னை, வேலூர், திருநெல்வேலியில் புதியதாக மூன்று உபகோட்டங்கள் உருவாக்கப்படும்".

5. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி செயல்படுத்துவதற்காக பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ், கீழ்க்காணும் அலுவலகங்களுக்கு தேவையான பணியிடங்கள், பணிப்பெயர்ச்சியின் அடிப்படையிலும் மற்றும் புதியதாகவும் தோற்றுவிப்பதற்கு உரிய நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித் துறை, சென்னை அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டார்:-

(1) மதுரையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கவிருக்கும் 1 (ஒரு) கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம் அலுவலகம் மற்றும் அதற்கு தேவையான 14 பணியிடங்கள் (2 பணியிடங்களை ஒப்புவிப்பு செய்வதன் மூலம் நிரந்தரப் பணியிடமாக செயற் பொறியாளர் புதிய பணியிடம் தோற்றுவித்தல் மற்றும் 13 பணியிடங்கள் பணிப்பெயர்ச்சியின் அடிப்படையில்).

(2) தற்போதுள்ள கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம், சென்னை-5 அலுவலகத்தின் கட்டுப்பாட்டின் கீழ், சென்னையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கவிருக்கும் 1 கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்டம்-2 அலுவலகம் மற்றும் அதற்கு தேவையான 7 பணியிடங்கள் (பணிப்பெயர்ச்சியின் அடிப்படையில்).

(3) தற்போதுள்ள கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம், சென்னை-5 அலுவலகத்தின் கட்டுப்பாட்டின்கீழ், திருவண்ணாமலையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கவிருக்கும் 1 (ஒரு) கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்டம் அலுவலகம் மற்றும் அதற்கு தேவையான 16 பணியிடங்கள் (பணிப்பெயர்ச்சியின் அடிப்படையில்).

(4) மதுரையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கவிருக்கும் 1 (ஒரு) கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம் அலுவலகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் திருநெல்வேலியை தலைமையிடமாகக் கொண்டு கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உப கோட்டம் அலுவலகம் மற்றும் அதற்கு தேவையான 6 பணியிடங்கள்(பணிப்பெயர்ச்சியின் அடிப்படையில்).

6. மதுரையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கவிருக்கும் 1 கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்ட அலுவலகத்திற்கு புதியதாக நிரந்தரப் பணியிடமாக தோற்றுவிக்கப்படவுள்ள செயற்பொறியாளர் பணியிடத்திற்கு ஏற்படும் ஆண்டு ஊதியம் மற்றும் இதரப்படிகளுக்கான செலவினம் ரூ.10,17,384/-ஐ செயற் பொறியாளர், பொதுப்பணித் துறை, கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம், இராமநாதபுரம் அலுவலகத்திலுள்ள 1 செயற் பொறியாளரின் தொழில்நுட்ப நேர்முக உதவியாளர் பணியிடம் மற்றும் கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம், மதுரையின் கீழ் இயங்கும் கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உபகோட்டம்-1, மதுரை அலுவலகத்திலுள்ள 1 அலுவலக உதவியாளர் (நிரந்தரப் பணியிடம்) ஆகிய 2 (இரண்டு) பதவிகளை அரசிற்கு ஒப்புவிப்பு செய்வதன் மூலம் ஏற்படும் சேமிப்பினை ரூ.12,02,304/-ஐ ஈடுசெய்யலாம் என முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித் துறை, அவர்கள் தெரிவித்துள்ளார்.

7. முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித் துறை, அவர்கள் மேற்காணும் கருத்துருவின் அடிப்படையில், அரசிற்கு கூடுதல் நிதிச்சுமை ஏதுமில்லை என்றும், 1 புதிய நிரந்தர பதவியாக செயற் பொறியாளர் பதவியை உருவாக்குவதற்கு ஏதுவாக 2 பணியிடங்களை அரசிற்கு ஒப்புவிப்பு செய்வதன் மூலம் ரூ.1,84,920/- அரசிற்கு ஆண்டு சேமிப்பு ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

8. முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித் துறை, அவர்களின் கருத்துருவினை நன்கு ஆய்வு செய்த பின்னர் அதனை ஏற்று, மதுரையை தலைமையிடமாகக் கொண்டு ஒரு கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்ட அலுவலகம், சென்னையை தலைமையிடமாகக் கொண்டு கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்ட அலுவலகம், திருவண்ணாமலையை தலைமையிடமாகக் கொண்டு கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்ட அலுவலகம், திருநெல்வேலியை தலைமையிடமாகக் கொண்டு கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்ட அலுவலகம், புதிதாக தோற்றுவித்தல் மற்றும் அவற்றிற்கான மொத்தம் 42 பணியிடங்கள் பணிப்பெயர்ச்சி அடிப்படையிலும் மற்றும் 1 செயற்பொறியாளர் பணியிடம் புதிதாக தோற்றுவிப்பதற்கு நிருவாக ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது:-

(1) மதுரை தலைமையிடமாகக் கொண்டு இயங்கவிருக்கும் 1 (ஒரு) கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம் அலுவலகம் மற்றும் அதற்கு தேவையான கீழ்க்கண்ட 14 பணியிடங்கள் (2 பணியிடங்களை ஒப்புவிப்பு செய்வதன் மூலம் நிரந்தரப் பணியிடமாக 1 செயற்பொறியாளர் புதிய பணியிடம் தோற்றுவித்தல் மற்றும் 13 பணியிடங்கள் பணிப்பெயர்ச்சியின் அடிப்படையில்) தோற்றுவிக்கப்படுகிறது:-

(த.பி.பா)

6

| வ. எண் | பதவியின் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | செயற் பொறியாளர் (நிலை–25, 59,300–2,17,600) | 1 |
| 2 | உதவிப் பொறியாளர் (சிவில்) / இளநிலை பொறியாளர் (சிவில்) | 1 |
| 3 | முதுநிலை வரைதொழில் அலுவலர் (சிவில்) | 1 |
| 4 | இளநிலை வரைதொழில் அலுவலர் | 1 |
| 5 | கண்காணிப்பாளர் | 1 |
| 6 | கோட்டக் கணக்கர் | 1 |
| 7 | உதவியாளர் | 2 |
| 8 | இளநிலை உதவியாளர் | 1 |
| 9 | தட்டச்சர் | 1 |
| 10 | ஓட்டுநர் | 1 |
| 11 | அலுவலக உதவியாளர் | 2 |
| 12 | காவலர் | 1 |
| | மொத்தம் | 14 |

(2) கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம், சென்னை–5 அலுவலகத்தின் கட்டுப்பாட்டின்கீழ், சென்னையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கவிருக்கும் 1 (ஒரு) கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்டம்–2 அலுவலகம் மற்றும் அதற்கு தேவையான கீழ்க்கண்ட 7 பணியிடங்கள் பணிப்பெயர்ச்சியின் அடிப்படையில் தோற்றுவிக்கப்படுகிறது:–

| வ. எண் | பதவியின் பெயர் | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | உதவி செயற் பொறியாளர் | 1 |
| 2 | இளநிலை பொறியாளர் (சிவில்) / உதவிப் பொறியாளர் (சிவில்) / | 3 |
| 3 | உதவியாளர் | 1 |
| 4 | அலுவலக உதவியாளர் | 1 |
| 5 | சுமைத்தூக்குப் பொறி இயக்குபவர் | 1 |
| | மொத்தம் | 7 |

(3) கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம், சென்னை–5 அலுவலகத்தின் கட்டுப்பாட்டின் கீழ், திருவண்ணாமலையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கவிருக்கும் 1 (ஒரு) கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்டம் அலுவலகம் மற்றும் அதற்கு தேவையான கீழ்க்கண்ட 16 பணியிடங்கள் பணிப்பெயர்ச்சியின் அடிப்படையில் தோற்றுவிக்கப்படுகிறது :–

| வ. எண் | பதவியின் பெயர் | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | உதவி செயற் பொறியாளர் | 1 |
| 2 | உதவிப் பொறியாளர் (சிவில்) / இளநிலை பொறியாளர் (சிவில்) | 4 |
| 3 | உதவியாளர் | 3 |
| 4 | ஓட்டுநர் | 1 |
| 5 | அலுவலக உதவியாளர் | 2 |
| 6 | காவலர் | 1 |
| 7. | மஸ்தூர் | 1 |
| 8. | உதவியாள் | 1 |
| 9. | திறன்பெற்ற உதவியாளர் (தரம்-2) | 2 |
| | மொத்தம் | 16 |

(4) மதுரையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கவிருக்கும் 1 (ஒரு) கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம் அலுவலகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் திருநெல்வேலியை தலைமையிடமாகக் கொண்டு கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உப கோட்டம் அலுவலகம் மற்றும் அதற்கு தேவையான 6 பணியிடங்கள் பணிப்பெயர்ச்சியின் அடிப்படையில் தோற்றுவிக்கப்படுகிறது :-

| வ. எண் | பதவியின் பெயர் | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | உதவி செயற் பொறியாளர் | 1 |
| 2 | உதவிப் பொறியாளர் (சிவில்) / இளநிலை பொறியாளர் (சிவில்) | 3 |
| 3 | உதவியாளர் | 1 |
| 4 | அலுவலக உதவியாளர் | 1 |
| | மொத்தம் | 6 |

9. மேலே தற்போதுள்ள கட்டட மையம் மற்றும் பாதுகாப்புக் கோட்ட அலுவலகம் மற்றும் அதனை சார்ந்த உபகோட்ட அலுவலகங்களின் ஒப்பளிக்கப்பட்ட தற்காலிக பணியிடங்களின் விவரங்கள் பிற்சேர்க்கை-1லும் மற்றும் புதிதாகத் தோற்றுவித்தல் மற்றும் பணிப் பெயர்ச்சி அடிப்படையில் உருவாக்கப்பட்ட பணியிடங்களுக்கான விவரங்கள் பிற்சேர்க்கை-2 முதல் 6 வரையிலும் மற்றும் செலவினம் பற்று வைக்கப்படவேண்டிய கணக்குத் தலைப்புகளின் விவரங்கள் முறையே பிற்சேர்க்கை-7 இவ்வாணையுடன் இணைக்கப்பட்டுள்ளன.

10. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.29307/Infra-I/2023, நாள் 20.09.2023-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. Post Sanction Ledger No.202309 PSL 0184.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சந்தர மோகன் B**
**அரசு முதன்மைச் செயலாளர்**

## ENGIBEF PHASE-V SCHEME

| S.No. | ENGIBEF No. | Name & Address |
|---|---|---|
| 1 | V-673-CUD&VM | **Er.M.K.P.PRASAD,**<br>AE, WRD, Vellar Basin Sub Division, Kallakurichi |
| 2 | V-673-TNJ | **Er.V.Geetha,**<br>AE, WRD, Vennar Section-I, Mannarkudi, Thanjavur |
| 3 | V-674-VLR | **Er.D.Kalaiarasan,**<br>AE, WRD, Quality Control Sub Division, Vellore |
| 4 | V-675-CHE | **Er.B.Angayarkanni,**<br>AE, WRD, O/o CE, WRD, DR&CS, Chepauk, Chennai-5 |

We request our member engineers who have not enrolled so far in ENGIBEF Phase V Scheme to enroll as full-fledged member by remitting the amount through core banking system '**TNPWD ENGIBEF, State Bank of India, A/C No.10031641514 of PWD Complex Branch, Chepauk, (IFSC Code SBIN0006489), Chennai" or through branch offices in Cash / Cheque / Demand Draft.**

We solicit your earnest co-operation to enroll in this Scheme & assist the deceased Engineers' family.

**"We expect more members to enroll in ENGIBEF PHASE V"**

**Er.V.Ponraj**
Treasurer/ENGIBEF (Cell:9380562186)

**Er.M.Suganthi**
Secretary/ENGIBEF

## Wedding Greetings...

| Bridegroom | Bride | Date & Venue |
|---|---|---|
| **Selvan.M.Harrish**<br>Associate Account Manager, Amazon Development Centre India, Chennai<br>**S/o.Er.G.Muralidharan,**<br>Former Engineer-in-Chief, & Chief Engineer(General) WRD. | **Selvi.R.Bhavani**<br>Software Engineer, FIS Global, Chennai | **Reception** on Thursday 19.10.2023 from 6.30 PM & **Muhurtham** on Thursday 20.10.2023 from 7.30 AM – 9.00 AM at **A.S.Guruswamy Mahal,** Sevoor, Karnampattu, Katpadi-632106. |
| **Er.N.Karthik,**M.E.,<br>Assistant Engineer, WRD. | **Er.R.Kalpana,**M.E.,<br>**D/o.Er.P.Rajasekaran,**M.E.<br>Assistant Engineer, WRD, Anti Sea Erosion Sub Division, Chepauk, Chennai-5 | **Reception** on Wednesday 26.10.2023 from 6.00-9.00PM & **Muhurtham** on Thursday 27.10.2023 from 4.30 AM – 5.30 AM at **Sattaiyampudur Sengundhar Thirumana Mandabam,** Devanangurichi Road, Thiruchengode. |

**We wish them a happy & Prosperous Wedding Life – Editor**

RNI No.TNBIL/2010/35983

Regd.News Magazine

Date of Publication : Third week of every month

தனி பிரதி ரூ.10/-

PORIYAALAR, Egmore RMS / 1 Patrika, Chennai Reg. No.T.N. / CH (C) / 307 / 21 - 23
Posted on : 18.10.2023, Licensed to Post without prepayment under WPP No.TN/PMG(CCR), WPP No.340/21-23





30.09.2023 அன்று ஓய்வு பெற்ற **பொறி.K.பிரபாகர்,** சிறப்புத் தலைமைப் பொறியாளர், நீ.வ.து. மற்றும் **தலைவர், பொறியாளர் சங்கம்,** சென்னை அவர்களை நமது தலைமைச் சங்கப் பொறுப்பாளர்கள் நேரில் சந்தித்து வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

Printed by: **Mr.S.G.PARTHASARATHY**, and Published by: **Er.B.ARUN**,M.E. on behalf of Association of Engineers, PWD from Association of Engineers, PWD, PWD Campus, Chepauk, Chennai - 5, and Printed at : V.P.S. Printers, 292, Triplicane High Road, Triplicane, Chennai - 5, and Published at Association of Engineers, PWD, PWD Campus, Chepauk, Chennai-5, Editor:**Er.K.MURUGAN**,M.E.